உ
சிவமயம்

gistered as a News
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

ஜோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ஞ் ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ருஅ] யாழ்ப்பாணம்— விய ஞூ வைகாசிமீ உஉஉ (1946 ஜூன் 4 செவ்வாய்க்கிழமை) [இல கஎ

# பட்டினி போக்க வழி

## உணவுப்பொருள் விருத்திபெற மார்க்கம் விவசாயியுடன் ஒத்துழைக்க வேண்டும்

### சென்னைச் சட்டசபையில் அரியபேச்சு

—(:—:)—

சென்னை மேல்சபையில், உணவு நெருக்கடி சம்பந்தமான விவாதம் நிகழ்ந்தபோது, டக்ரர் T. S. S. இராஜன் அவர்கள் உணவு அபிவிருத்தி விஷயமாகக் கூறிய யோசனைகள், இந்த இலங்கை விஷயத்திலும் மிகப் பொருத்தமானவை பற்றி, அவரது பிரசாரணச்சுருக்கம் கீழே தரப்படுகின்றது:

பணம்: பணத்தாலே நம்மக்களின் பஞ்சத்தையும் பட்டினியையும் போக்க முடியாது. எமக்குத்தேவை உணவுதான். இதனை இந்திய அரசாங்கம் உணர்ந்துவிட்டது. அதனுல்தான் அரசாங்கப் பிரதிநிதிகள் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் பறந்து திரிகிருர்கள்.

எம் நாட்டிலே பரந்த நிலங்கள் உண்டு. அவற்றைப் பண்படுத்தி விளைவிக்க ஆட்கள்தான் தேவை. நம் நாட்டு மக்களுக்கு நிலத்தைப் பண்படுத்த ஆற்றல் இல்லையா? பண்படுத்திப் பயிர் உண்டாக்கத்தக்க வன்மையில்லையா? உண்மையைக் கூறும் இடத்து இந்திய விவசாயிகளுக்கு இணையான விவசாயிகள் இந்த உலகில் எங்கும் இல்லை. அவர்களோ ஆண்டுதோறும் வருஷம் 365 நாட்களும் பாடுபடுகிருர்கள்தான். ஆனுல் அவர்கள் நாளடைவில் வறியவராதல் போல, அவர்களுடைய நிலமும் வரவரச் சத்துக் கெட்டுக்கொண்டே வருகிறது.

இப்போதும் இந்த நாட்டுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை நாமே பயிரிடமுடியயும் என்று நான் கூறுவேன். இவ்விஷயமாக ஓர் உதாரணம் காட்டுதல் பொருத்தமுடைத்தாகும். யுத்தகாலத்தில் இராணுவப் பகுதியார்க்கு ஓர் தொகை வெங்காயம் தேவையாக இருந்தது 6 மாத காலத்துக்குள் இவ்வளவு தொகை வெங்காயம் வேண்டும் என்ற உத்தரவு பிறந்தது. அந்தக் காலத்தில் சென்னை மாகாணத்தில் பொறுப்பற்ற ஓர் அரசாங்கமேயிருந்தது. அப்படிப்பட்ட அரசாங்கம் இருந்தபோதும், இராணுவம் விரும்பிய அவ்வளவு தொகை வெண்காயமும் கிடைக்கத்தான் செய்தது இராணுவத்தினர்க்கு வெங்காயம் உதவியவர்களில் நானும் ஒருவன். ஏக்கர் ஒன்றுக்கு முற்பணமாக ரூபா 300 கேட்டேன். அது மாத்திரமன்றி ஓர் விவசாய நிபுணரை என் பண்ணைக்குத் தரவேண்டும் என்றும், வெங்காயம் இருத்தல் 12 சதமாகவே தரமுடியுமென்றும் இராணுவத்துக்கு நான் நிபந்தனைகள் விதித்தேன். இராணுவத்தினர் எனது நிபந்தனைகளுக்கு இணங்கினர். நானும் $4\frac{1}{2}$ மாதகாலத்தில் குறித்த தொகை வெங்காயத்தை அவர்களுக்குக் கொடுக்க முடிந்தது. இராணுவம் கொடுத்த முற்பணத்தை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்தபின், ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 600 இலாபம் எனக்குக் கிடைத்தது. இதனைநான் ஏன் கூறுகிறேன் என்ருல், நாங்கள் எல்லாரும் மனம் வைத்தால், எமக்குத் தேவையான உணவுப்பொருள்களை நாமே உண்டாக்கிக்கொள்ள முடியும் என்பதைத் தெருட்டுவதற்காகவே; அரசாங்கமானது இவ்விஷயத்தில் ஓர் தைரியமான கொள்கையைக் கையாள வேண்டும். விவசாயப் பகுதியினரைக் கலந்து ஆலோசித்து விவசாயிகளுக்கு வேண்டிய பணஉதவி செய்ய வேண்டும். ஆகவே எழுதி, இங்கே அபிப்பிராயம் கேட்டுச் சுற்றி வளைத்து அரசாங்க ரீதியான கடிதப்போக்குவரத்துக்கள் செய்வதால் உணவுப் பொருள்கள் விளையமாட்டா. விவசாயிகள் நிலத்தில் இறங்கவேண்டும். பண்படுத்தவேண்டும். உணவுப்பயிர்களை உண்டாக்கவேண்டும். அப்போதுதான் எமக்கான உணவை நாம் பெறமுடியும்.

உணவுப் பிரச்சினையை நாம் மிகச் சொற்பகாலத்தில் தீர்த்துவிட முடியாது. இன்னும் ஓர் பத்துவருஷத்துக்காவது இந்த நெருக்கடி இருக்கத்தான் செய்யும். எனவே அதற்குத்தக்கதாக அரசாங்கம் திட்டம் போடவேண்டும். விவசாயிகளுக்கு அரசாங்கம் போதிய உதவிசெய்ய வேண்டும். அரசாங்க உத்தியோகத்தர்களும், மந்திரிமாரும் ஊர்களோறும் சென்று, "அதிக உணவு உற்பத்தி செய்யுங்கள்" என்று சும்மா கூறுவதால் ஆம்பயன் யாதுமில்லை. விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் திட்டமும், உதவி செய்யும் திட்டமும் தற்போது மிகவும் கேவலமுறையில் இருக்கிறது. ஓர் விவசாயி கடன் அல்லது உதவிபெற வேண்டுமானுல், அவன் படும் கஷ்டங்களும் அலைச்சல்களும் அம்மட்டு இம்மட்டு அல்ல. உதவி செய்யும் விஷயத்தில் அரசாங்கம் விவசாயியை அலைக்கக்கூடாது. "அப்பப்பா? அரசாங்கம் தருகிற உதவியும் போதும், நான் படும் அலைச்சலும் போதும்" என்று விவசாயி வெறுப்படையாமல் இருக்க அரசாங்கம் துரிதமாகக் கருமம் ஆற்றுதல் வேண்டும்

இனி உணவுப் பொருள்களைத் துர்விநியோகப்படுத்துதல் சம்பந்தமாக இதனை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்நாட்டு விவசாயிகளோ ஏழை மக்களோ உணவுப்பொருள்களைத் துர்விநியோகப்படுத்த மாட்டார்கள். அவர்கள் கண்டபடி செலவழிக்கமாட்டார்கள். இவ்விஷயத்தில் செல்வராயுள்ளவர்களைக் கண்டிக்க வேண்டும். இழவு காலங்களிலும், மங்கல நாட்களிலும் செல்வர்கள்தான் கண்டபடி உணவுப் பொருள்களைத் துர்விநியோகப்படுத்துகின்றனர்.

விவசா[illegible] முதலியனவற்றை அறவிடும் முறை மிகவும் கேவலமானது. தலைமைக்காரராயுள்ளோர் சர்வாதிகார முறையில் நடப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். விவசாயிகளின் ஒத்துழைப்பைப் பெறுதற்கு இதுதான் வழியா? இவ்விஷயத்தில் விவசாயிகளின் ஒத்துழைப்பு வேண்டாமா? விவசாயிகளின் அற்ப தொகையான, அவர்கள் தங்கள் தேவைக்கு வைத்திருந்த நெல்லைப் பறித்துவிட்டு அவர்களுக்குக் கூப்பன் புத்தகங்களைக் கொடுப்பதா? அவர்களுடைய வயிறு எரியாதா?

உணவுப் பங்கீட்டைக் குறைப்பதாலும் எவ்வித பயனும் இல்லை. உணவுப்பங்கீடு குறைதலால், செல்வராயுள்ளார், அதனுல் பாதிக்கப்பட மாட்டார். அவர்கள் தங்களுக்குத் தேவையான உணவை எவ்வாறு பெற்றுவிடுவர். ஏழைகள்தான் இதனுல் மிகவும் பாதிக்கப்படுவர். அவர்களுடைய தேகசக்திக்குத் தேவையான உணவு கிடைக்காததினுல் அவர்கள் பட்டினி கிடந்து மெலிவுற்று, தொழில் செய்ய முடியாதவர்களாகின்றனர்.

விவசாயிகளுக்கு அரை குறையான பண உதவி செய்தால் ஒரு பயனும் கிடைக்கமாட்டாது. விவசாயியானவன் விளைவிக்கும் உணவுப் பொருளின் தொகைக்கேற்ப அவனுக்குப் பணஉதவி செய்ய வேண்டும் என்று நான் சிபாரிசு செய்கிறேன். தற்போதுள்ள நிலையை நோக்கவேண்டும். கூலிச்செலவைப் பார்க்க வேண்டும். மாடு கன்று தாபரிக்கும் செலவை நோக்கவேண்டும். இவற்றுக்கேற்ப விவசாயிக்குப் பணஉதவி செய்யவேண்டும் விளையும் தானியங்களை விவசாயிகளிடம் இருந்து வாங்கும்போது, தற்கால நிலைமைக்கேற்ப விலை கொடுக்கவேண்டும். உத்தியோகத்தரும், மந்திரிமாரும் தம்மனம் போனவாறு விலைகளை நிர்ணயிக்காமல், விவசாயியின் உண்மைநிலையை உணர்ந்து அவனுடன் கலந்தாலோசித்து, அவனை நட்டவாளியாக்காத ஓர் விலையை நிர்ணயித்தல் வேண்டும்

## மின்சாரப்பகுதி அதிகாரி

## பதவி நீக்கத்துக்குக் காரணம்

### நகரசபையில் விளக்கம்

மின்சாரப்பகுதி அதிகாரியாயிருந்த ஸ்ரீ எஸ். நாகேந்திரம் என்பவரைப் பதவியினின்றும் நீக்கிய காரணத்தைவிளக்கும்படி ஸ்தலஸ்தாபனப்பகுதி அதிகாரி யாழ்ப்பாண நகரசபையைக் கேட்டது அதனைப் பற்றி யோசிக்கும்படி சென்றமாதம் 13ந் திகதி நகரசபையின் விசேஷ கூட்டம் ஒன்று கூடியது.

ஸ்ரீ நாகேந்திரம் விஷயத்தில் நகரசங்கம் மிகவும் தாராள மனப்பான்மையுடன் நடந்திருக்கிறது. ஆனுல் அவருடைய காலத்தில் மின்சார யந்திரங்கள் அடிக்கடி பழுதடைந்து பல சம்பவங்களும் நிகழ்ந்தன. இவற்றின்பயனுல் சபை அவர்மீது கொண்டிருந்த நம்பிக்கை பங்கப்பட்டுவிட்டது, இந்த நகரசங்கம் ஸ்ரீ நாகேந்திரம் விஷயத்தில் மிகுந்த தாராள மனப் பான்மையுடன் நடந்தும், அச்சபையுடன் ஒததுழைக்க மறுத்த தோடமையாது தமக்கு எஜமானுயுள்ள சபையுடன் அவர் விசுவாசமாய் நடக்கவில்லை. இதன் பயனுகப் பொதுஜனங்களும் இச்சங்கத்தினரும் அவர்மீது வைததிருந்த நம்பிக்கையை அவர் இழந்துவிட்டார். அவர் அதிகாரியாகவிருந்தால் யாழ்ப்பாணம் மின்சாரப் பகுதியைத் திறம்படச் செவ்வனே நடத்த முடியாது. இவ்விஷயத்தில் ஸ்தல ஸ்தாபனச் சபைக்கு விஷயங்களை உள்ள உள்ளவாறு விளக்க, நகரசபைத் தலைவர் நேரே கொழும்புக்குப் போகவேண்டும். இப்படியான தீர்மானங்களை நகரசங்கம் ஷைகூட்டத்தில் சர்வாங்கீகாரமாக நிறைவேற்றியது.

அரசாங்கம் சர்வாதிகாரமாக விலையை நிர்ணயித்து விவசாயியை நட்டப்படுத்துவதாலேயே, விவசாயி தன்தொழிலில் போதிய ஊக்கம் எடுப்பதில்லை.

# இலவசக் கல்விக்குச் சாவுமணி?

## கத்தோலிக்கருடன் இரகசிய உடன்படிக்கையா

## சமசமாஜத் தலைவர் வெளியிடும் இரகசியம்

'நான் இப்போது ஓர் இரகசியத்தை வெளியிடுகிறேன். மிஸ்ரர் சேனநாயகா அடுத்த பாராளுமன்றத்தில் யார் யார் மந்திரிகளாகவரப்போகின்றனர் என்பதை நியமித்துவிட்டார். ஐக்கிய தேசியக் கட்சி மூலம் அவர் சில அபேட்சகர்களை நிறுத்தி, அவர்களையே மந்திரிகளாக்கப் போகின்றார். அவனுடைய தமையனுகிய மிஸ்ரர். எப் ஆர். சேனநாயக்காவின் மக்களுக்கு உப மந்திரிப் பதவிகள் கிடைக்கும்" என்று சம சமாஜக்கட்சித் தலைவரான டக்ரர். என். எம் பெரீரா சென்றவாரம் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நிகழ்ந்த பொதுக் கூட்டத்திற் கூறினுர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

'இலவசக் கல்வி முறையை மிஸ்ரர் [illegible]க்கா ஒழிப்பர். அவர் கத்தோலிக்கருடன் இரகசியமாக ஓர் உடன்படிக்கை செய்திருக்கிறுர். அதன் பயனுகக் கத்தோலிக்கரின் ஆதரவை அவர் தேட முயற்சிக்கின்றுர். கல்விமந்திரியான மிஸ்ரர் கன்னங்காரவுக்கும், சுகாதார மந்திரியான மிஸ்ரர் ஜோர்ஜ் டி. சில்வாவுக்கும் மிஸ்ரர் சேனநாயக்கா மந்திரிசபையில் இடம் கொடுக்கமாட்டார். டக்ரர் என். அற்றிக்கலை என்பவரே சுகாதாரமந்திரியாகநியமிக்கப்படுவர்"

இச்சந்தர்ப்பத்தில் கூட்டத்தில் இருந்த ஒருவர் ஸ்ரீ மகாதேவாவின் நிலைமை என்ன என்று கேட்டார். மிஸ்ரர் சேனநாயக்காவுக்குக் கீழ்ப் படிந்து நல்லபிள்ளைப் பட்டம் எடுத்துள்ள அவரும் உங்களால் தெரிவு செய்யப்பட்டால் மந்திரியாக வ[illegible] கூடும் என்று டக்ரர் பதிலிறுத்த[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், விய ஞு
வைகாசிமீ ௨௨ செவ்வாய்க்கிழமை

## இங்குள்ள தெருக்களின் நிலைமை

இந்த நாட்டிலாக, வேறு எந்த நாட்டிலாக அக்காலத்திலே தெருவீதிகள் இடப்பட்ட நோக்கம் எவவகையான வண்டிகளும் மக்களும் சிரமப்படாமற் போக்குவரத்துச் செய்தற்கேயாகும். இப்படியான கற் படுக்கப்பட்ட தெருக்கள் இந்நாட்டிலே பிருத்தானிய பரிபாலன காலத்திலேயே இடப்பட்டுக் காலகதியில் விருத்தி யடைந்து வரலாயின; மோட்டர் ரதம், பஸ், லொறி யென்னுமிவைகளின் சஞ்சாரம் இந்நாட்டிலே தொடங்குதற்கு முந்தி இலங்கை முழுவதிலும் யாழ்ப்பாண நாட்டுத் தெருக்களே சிறந்தனவெனப் பாராட்டப்பட்டன; மேலே சொல்லப்பட்ட மோட்டர்ரதங்கள் இங்கே சஞ்சரிக்கத் தொடங்கிய பின்னரும் இங்குள்ள வெண்ணிறமான தெருக்களுட் பல அகற்சியுடையனவாகத் 'தார்' இட்டுத் திருத்தப்பட்டன; இந்த உலக யுத்தந் தொடங்குங்காறும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தெருக்கள் நல்ல நிலையிற் கிடந்தனவெனலாம்; ஆனல் யுத்தந் தொடங்கிய பின்னர் இத் தெருக்களாற் பல பஸ்கள், பாரமான லொறிகள், பயங்கரமான இராணுவ "திறக்ஸ்"எனப்படும் பாரமான இரதங்கள் முதலிய இடையீடின்றிச் சஞ்சரிக்கத் தலைப்பட்டமையினல் இங்குள்ள நெடுந் தெரு, குறுக்குத் தெருக்களெல்லாம் சிதைந்து பள்ளமும் திடரும் புழுதியும் மாரிக்காலத்திலே சகதியுமாய்நிலைகுலைந்தன;யுத்த காலத்திலே ஓடிய "திறக்ஸ்" எனப்படும் இரதங்கள் சில, அவை யோடுதற்கு வீதிகளாயுள்ள தெருக்களைக்காட்டிலும் அகலமுடையனவாகக் காணப்பட்டன; இராணுவ லொறிகள் இடையீடின்றிச் சஞ்சரித்த யுத்தகாலத்திலே அந்த லொறிகள் வாயிலாக மாண்ட, ஊறடைந்த, அங்கபங்கப்பட்ட வழிப்போக்கர்களின் தொகை அதிகமென்பதை இலங்கை அரசினர் இறப்புப் பிறப்புக் கணக்குப் புத்தகத்திற் காணலாகும்.

இப்படியான சீர்கேடுகளுளவாக யுத்தம் முடிந்து பல மாசங்கள் சென்றும் இங்குள்ள தெருவீதிகள் பழையபடி சீராக்கப்படுதலின்றி, மனுஷராக, மாடுகளாக குதிரைகளாக இவர்களாலும், இவற்றாலும் இழுக்கப்படும் வண்டிகளாக, பலவகை மோட்டர் ரதங்கள் பஸ்களாக எவரும் [illegible]யும் இத் தெருவீதிகளினூற் [illegible]த்தல்கஷ்டமாகவிருக்கின்றது; சில தெருக்களில் அவை திறக்கப்பட்ட காலத்தில் அடிப்படையாக இடப்பட்ட பெரிய கற்களும் புலப்படக் கிடக்கின்றன; சில தெருக்கள் சிதைந்து பள்ளந் திடரோடும் புழுதியோடுங் கூடிய ஒழுங்கைகளாகத் தம் பழைய நிலைமையைக் கொண்டு கிடக்கின்றன; இத் தெருக்கள் இப்படிச் சீர்கெட்ட நிலைமையிற் கிடப்பதோடமையாது, இருமருங்கும் இத்தெருக்களைத் திருத்தும் நோக்கமாகச் சில வருடங்கட்கு முந்தியே கொண்டுவந்து குவை செய்யப்பட்ட "சல்லி"க் கற்கள் விரவிக் கிடக்கக் காணப்படுகின்றன; பட்டினத்திற்கு அழகு செய்வன தெருவீதிகளேயாகும். சஞ்சாரத்திற்கு இன்றியமையாதனவும் சிறந்த தெருக்களேயாகும்; சீர்கெட்ட இத்தெருக்கள் வாயிலாகச் சஞ்சரிப்பதினல் நேருங் கஷ்டங்கள் பல; அவற்றை இங்கே விரிப்பிற் பெருகும்; ஆதலினலே இத் தெருவீதிகளை விரைவிற் சீர்திருத்தி வைக்கும்படி அதிகாரிகளைக் கேட்கின்றேம்.

### 8 பிள்ளைகளைப் பெற்றுள்

சீனவைச் சேர்ந்த பீப்பிங் நகரத்துக் கப்பால்உள்ள 36 வயதுள்ளஒருசினமாது 8 பிள்ளைகளை ஓர் பிரசவத்திற் பெற்றதாக ஓர் பத்திரிகை கூறுகிறது எட்டும் ஆண் பிள்ளைகள் என்றும் அவை சுகமாக இருக்கின்றன என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

### ஜனனம் முதல் மரணம் வரை சகாயம்

ஜனனம் முதல் மரணம் வரை சகாயமளிக்கும் தேசீய 'இன்ஷூரன்ஸ்' மசோதா சென்றவாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சர்வாங்கீகாரமாக நிறைவேறியிருக்கிறது. பிரிட்டிஷ் மக்களில் வயதுவந்தோர் வேலையற்றிருக்கும்போதும் நோயுற்றிருக்கும் போதும், வயோதிப காலத்திலும் அரசாங்கம் போதிய பொருளுதவி புரிவதையே இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது

### அல்வாயில் துணிகரக் களவு

அல்வாயில் ஓர் தனவந்தர் வீட்டில் ஆயுத பாணிகளான 12 கள்வர் புகுந்து 20000 ரூபா பெறுமதியான ஆபரணங்களையும் ரொக்கத்தையும் களவாடிச் சென்று விட்டதாகத் தெரியவருகிறது கள்வா கூட்டம் வீட்டுக்குட் புகுந்து துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியதாயும் இரு இரும்புப் பெட்டிகளை எடுத்துச் சென்றதாயும் தெரிகிறது. பொலிசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

### நிலாவரை நீர்ப்பாய்ச்சல்

6-6-46 வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் புத்தூர் நிலாவரைக்குப் பக்கத்தேயுள்ள நவசைலேசுவரர் ஆலயத்துக்கு அத்திவாரம் எடுக்கப் படும் பின்னர்ப் பகல் 12 மணி வரையில் நீர்ப்பாய்ச்சுதல் ஆரம்பமாகும். வடமாகாணத் தலைவர் திரு. C. குமாரசுவாமி அவர்கள் நீர்ப்பாய்ச்சுதலை ஆரம்பித்து வைப்பார்கள்.

### பி. எஸ். ஸி பரீட்சையிற் சித்தி

யாழ்ப்பாணம் நகரசபையின் தலைவராயிருந்தவரும், நியாய துரந்தருமான நீராவியடி ஸ்ரீ க. ஐயாத்துரை அவர்களின் சிரேஷ்டபுதல்வன் ஸ்ரீ A கருணனந்தன் சென்னைச் சர்வகலாசங்கத்து பி. எஸ் ஸி. பரீட்சையிற் சித்தியடைந்துள்ளனர் என்று அறியலானேம்,

### இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி

இந்த ஆண்டின் முதல் நாலு மாதத்திலும் 192,949,351 ரூபா பெறுமதியான பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. 263,545 459 ரூபா பெறுமதியான பொருள்கள் வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாயிருக்கின்றன.

# மந்திரிக்கு வேப்பம் கஷாயம்

## சலரோக வியாதிக்குத் தக்க மருந்து வைத்தியர்களுக்குள் அபிப்பிராயபேதம்

### வேப்பம் பட்டைக் கஷாயத்தைப் புகழுகின்றுர் மந்திரி

வேப்பமரப்பட்டை, இலை முதலியவற்றில் இருந்து காய்ச்சப்படும் கஷாயம் சலரோகத்தைச் சிகிச்சை செய்யுமா? இந்தப் பிரச்னையை இலங்கை வைத்திய சுகாதாரப்பகுதி மந்திரி மிஸ்ரர் ஜோர்ஜ். ஈ. டி. சில்வா அவர்கள் கிளப்பி யிருக்கிறுர்.

மிஸ்ரர் சில்வா இப்போது சிலகாலமாகச் சலரோகத்தாற் பீடிக்கப்பட்டார். மேனுட்டு வைத்தியத்தில் திறமை பூண்ட சிலர் வைத்தியம் செய்தனர். இலங்கையின் வைத்தியப்பகுதி முழுவதுக்கும் தலைவர் அல்லவா அவர்! ஆனல் அவருடைய நோய் குணமாகவில்லை ஒரு நண்பருடைய ஆலோசனையின் பேரில் வேப்பம்பட்டைக்கஷாயம்போடுவித்துக்குடித்தார். சிலநாள் உபயோகத்தின்பின்னர் ஆச்சரிப்படத் தக்கவிதமாக, அவருடைய சலரோக வியாதி குணமானது இதனைஅவர்க்குச் சிகிச்சை புரிந்த மேனுட்டு வைத்திய நிபுணர்களே ஒப்புக் கொள்ளுகின்றனர்.

ஆனல் இந்த வேப்பங் கஷாயத்தைப் பருகியதால் மாத்திரம் மந்திரியுடைய சலரோகம் குணமானதா? சலரோகத்தைக் குணப்படுத்தும் சக்தி வேம்புக்கு உண்டா? மந்திரி உண்மையில் சலரோகத்தினல் தான் பீடிக்கப்பட்டாரா? அல்லது அவரைப் பீடித்தது வேறேதும் வியாதியா? என்னும் இன்னேரன்ன கேள்விகள் இப்போது வைத்தியர்கள் மூளையைக் குழப்பி வருகின்றன. தனது நோய் சலரோகம் தான் என்றும் அதனைக் குணப்படுத்தியது வேப்பம் பட்டைக் கஷாயம் தான் என்றும் மந்திரி திடமாகக் கூறுகிறுர். ஆனல் இவருடைய அபிப்பிராயத்தைப் பல வைத்தியர்கள் ஆட்சேபிக்கின்றுர்கள்.

உதாரணமாக, யாழ்ப்பாணம் ஷாயன்மார்கட்டு டக்ரர் வீ. எஸ். இராமநாதன் அவர்கள், வேப்பம் கஷாயத்துக்குச் சலரோகத்தைக் குணப்படுத்தும் தன்மையில்லை என்றும், அவர் வருந்தியது வேறு வியாதியினலே யிருக்கலாமென்றும் ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினுர் இதனை மந்திரி சில்வாவுக்குக் காட்டியபோது, "இந்த மனுஷனுக்கு என்னுடைய வியாதி என்ன என்று தெரியுமா? எனது வியாதி சலரோகந்தான். அதனைக் குணப்படுத்தியது வேப்பம்பட்டைக்கஷாயம்தான்"என்று பதிலிறுத்தார்.

வேப்பம்பட்டைக்கஷாயத்தை மந்திரிக்குச் சிபார்சுசெய்தவர், அரசாங்கசபையில்நியமனப்பிரதிநிதியாயுள்ள மிஸ்ரர். ஏ. ஆர். ஏ. றசீக் என்று இப்போது தெரிகிறது. இற்றைக்குச் சில காலத்துக்கு முன் ஓர் ஆங்கில மாது சலரோகத்தாற் பலகாலமாகப் பீடிக்கப்பட்டு மரணத்தறுவாயிலிருந்தார் என்றும், அந்நோய்க்குப் பரிகாரமாக மிஸ்ரர் றசீக் வேப்பங்கஷாயத்தைச் சிபார்சு செய்தாரென்றும் அக் கஷாயத்தைப் பருகியபின் குறித்த ஆங்கிலமாது குணமடைந்தார் என்றும் தெரிகிறது இந்த விபரத்தை மிஸ்ரர் றசீக் இப்போது வெளியிட்டிருக்கிறுர். எதுஎப்படியிருந்தபோதிலும் நமது இலங்கை மந்திரியின் சலரோகத்தைக் குணப்படுத்தியது வேப்பம் கஷாயம் என்பது வெளியாகியிருக்கிறது. சுதேச - மேனுட்டு வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயம் எவ்வாருக இருக்குமோ?

### உருளிவெளித்தோட்டநிலைமை

சென்ற 31 ந் திகதியுடன் உருளிவெளித்தோட்டத்தைவிட்டு அங்கிருந்த இந்தியத் தொழிலாளர் வெளியேறவேண்டும். அரசாங்கத்தின் உதவி அதிகாரியாயுள்ளவர் சென்ற 32-ந் திகதி தோட்டத்துக்குச் சென்று அங்கிருந்த 475 தொழிலாளரும் தமக்குரிய சம்பளத்தையும் பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொண்டு தோட்டத்தை விட்டு வெளியேறும்படி கேட்டார், தாங்கள் பலவருடகாலமாக, அத்தோட்டத்திலேயே இருப்பதாயும், தாங்கள் இனிச்செல்வதற்கு வேறிடம் கிடையாது என்றும் தொழிலாளர் கூறி சம்பளம்மட்டும் பெற்றுக்கொண்டு பற்றுச்சீட்டு வாங்க மறுத்துவிட்டனர். எது எவ்வாறு நேரினும் தாங்கள் இத்தோட்டத்தைவிட்டு வெளியேறுவதில்லை என்று இந்தியத் தொழிலாளர் கூறுகின்றனராம் இவர்களை அகற்றி இலங்கையரை அங்கே குடியேற்ற அதிகாரிகளும் பிடிவாதமாக இருக்கின்றனர்.

### இந்திய சமஷ்டியில் இலங்கையும் சேரவேண்டும்

பிரபல முஸ்லிம் தலைவரான ஆகாகான் அவர்கள் இப்போது தென் ஆபிரிக்காவில் தங்கி நிற்கிறுர், இந்திய அரசியலமைப்பு விஷயமாக அவர் தமது திருப்தியை வெளியிட்டு, இந்திய சமஷ்டி அரசியல் ஏற்பட்டபின் இலங்கையும் பர்மாவும் இச்சமஷ்டியிற் சேரவேண்டுமென்று குறிப்பிட்டார்.

## விசேட பொதுக் கூட்டம்

ஆசிரியர்களே!
சம்பளம் போதாது! முயற்சி செய்யுங்கள்!
ஒன்று சேருங்கள்!!

வட இலங்கை (தமிழ், ஆங்கில) ஆசிரியர்சங்க ஆதரவில்
8-6-46 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு
யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்.

திருவாளர்கள்
J.C. அமரசிங்கம், S.இராசரத்தினம், S.R.கனகநாயகம்
முதலிய பல பெரியார்களும் பேசுவார்கள்

ஆசிரியர்கள் அனைவருடைய சமுகமும் வேண்டப்படுகின்றது

T. T. ஜெயரத்தினர், காரியதரிசி (வ. இ. ஆ. ஆ. ச.)
N. தம்பிரத்தினம், காரியதரிசி (வ. இ. த. ஆ. ச)

யாழ்ப்பாணம்
3-6-46

(Mis 74 4-6-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைக் காட்சி

வித்துவான் M. ஆறுமுகதேசிகர், தருமபுர ஆதீனம்

'ஒளிமுன் இருள் எங்கும் இல்லை' என்பது பண்டுதொட்டு இன்றளவும் பயின்றுவரும் ஒரு சொற்றொடர். இது 'இத்துணைத்து என்று வரையறையுணரப்படும் பொருளும் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும் வினைப்படுத்துக் கூறுங்கால் முற்றும்மை கொடுத்துக் கூறுக' என்னும் இலக்கணப்பகுதிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. அதனைப் படித்த சிறுவர்கள் ஒளியைத் தருவன இரண்டு; ஒன்று விளக்கு மற்றொன்று பல்லோராலும் புகழப்படும் சூரியன். இவைகளைக் கண்டால் இருள் நில்லாது என்று எண்ணியிருப்பார். உலக விளக்காகிய சூரியனுக்கு முன்பாக இருள் அஞ்சாது நிற்கிறது என்று ஒருவர் கூறினால் இவர் குருடரோ என்று எள்ளி நகைத்தாடுவர்.

செங்கதிர்க் கடவுளாகிய சூரியனுக்கு முன்னர் இருள் இருக்கிறது என்றனர் ஒரு பெரியார்; திருவருளும் குருவருளும் நிரம்பப்பெற்றவர் அவர். இருள் இருக்கின்றது; எங்கு? பூக்கள் நிறைந்த சோலையில். எப்படி? பெரிய அறை; ஜன்னல் இல்லாதது; காலமோ உச்சிப்பொழுது; எப்படியிருந்தாலும் அவ்வறையில் இருள்தானே நிறைந்திருக்கும். ஒளி புகுந்து நிறையுமோ? காரணம் மறைப்பே, ஆகவே தடை உண்டாயின் ஒளிமுன்னும் இருள் இருக்குமல்லவா? அதுபோல சோலையில் பலவகை மரங்கள் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு மரமும் பற்பல கிளைகளோடு கூடியன. கிளைகள் தோறும் இலைகளும் பூக்களும் நிறைந்திருக்கின்றன. அதுமட்டுமா? சோலையின் மீது மேகங்களும் படிந்திருக்கின்றன. இவ்வாறிருப்பின் சூரியன் என்ன செய்யும். பூக்களினாலும் இலைகளினாலும் ஏற்பட்ட மறைப்பினாலே ஒளி தடைப்படுகின்றது. உள்ளே புகமுடியவில்லை. ஆகவே இருள் அங்கு தங்குவதாயிற்று. இதனைக் கண்ட சிறுவர்கள் பெரியாரைப் பழிப்பரோ? அலலர், பின் யாது செய்வர்; பெரியாரது மதிநுட்பத்தைக் கண்டு மகிழ்வர்.

"ஒண்கதிர் பரப்பும்
        செங்கதிர்க் கடவுள்
வெயில்கண்(டு) அறியா
        வீங்கிருட் பிழம்பில்
புயல் கண்படுக்கும்
        பூந்தண் பொதும்பர்"

என்பது அந்நுட்பங்காணும் பகுதியாகும்.

இத்தகைய சோலையில் ஓரிடத்தே மயில் ஆடுகின்றது. எங்கு நின்று ஆடுகின்றது? ஆடுதற்கு உபகரணமாக எழுகின்ற இயற்கை ஒலிகள் யாவை? இந்த இயற்கைக் காட்சி, தன்னுடைய புலவனுக்கு எதனை நினைப்பிக்கிறது? என்று காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சோலையின் நடுவே கமுகமரம் ஒன்று நிற்கிறது. அது மிகவும் உயர்ந்திருக்கிறது; பழக் குலைகள் நிறைந்திருக்கின்றன. நான்கு பக்கங்களிலும் வாழை மரங்கள் தோன்றி அழகு செய்கின்றன. கமுகமரத்தின் கீழ் முல்லைக்கொடிகள் தோன்றித் தழைத்து கமுகின்மீது படர்கின்றன, மரத்தின் உச்சியளவும் சென்றன. அதன்மேற் செல்ல முடியவில்லை. ஏன்? பற்றுக்கோடு இல்லை. பின் என்ன செய்தன. அபமாக கிளைகளாகிய மட்டைகளில் சுற்றிச் சுற்றிப் படர்கின்றன. அக்கிளைகளும் போதவில்லை. கீழ்நோக்கி வளையத் தொடங்கின. நான்கு பக்கங்களிலும் தோன்றியுள்ள வாழை மரங்களைக் கண்டன; பெரு மகிழ்ச்சியோடு தாவிப்படர்ந்தன.

காண்பதற்கு அழகானது; விரிந்த சிறகினையுடையது: இத்தகைய மயில் ஒன்று கமுகமரத்தின் மீதேறி உட்கார்ந்தது; சிறகுகளை விரித்து ஆடுகின்றது. சோலையில் குரங்குகள் அதிகம் அவைகள் பலாப்பழங்களைப் பறித்து மடியிலே வைத்துக்கொண்டன. இரு புறங்களிலும் தமது கையினாலே அடிக்கின்றன. அதனைக்கண்டது மற்றொரு குரங்கு; தானும் ஒரு பலாப்பழத்தைப் பறித்தது. அதனைப் பிடுங்கிக்கொள்ளுதற்குச் சில குரங்குகள் பின்தொடர்ந்தன. பின்தொடர்வதைக் கண்ட குரங்கு தான் பறித்த பலப்பழத்தைத் தலைமேற் சுமந்துகொண்டு ஓடத்தொடங்கியது. ஓட முடியவில்லை. வாழைமரத்தின்மீது ஏறியது. அப்பொழுதும் விட்டபாடில்லை முல்லைக்கொடி வழியே கமுக மரத்திற்குச் சென்றது. இவ்வாறு கொடியின் வழியாகக் குரங்குகள் கமுகமரத்திற்கும் வாழை மரத்துக்கும் டலமுறை செல்லுகின்றன. இத்தகைய இயற்கைக்காட்சிகளை அந்நட்புலவர் காணுகிறார். அப்பொழுது இளமையிற் கண்ட ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. அந்நிகழ்ச்சி யாது?

கழைக்கூத்தாடுபவர்கள் தெருச்சவில் ஒரு மரத்தை நடுவார்கள். அது கீழே சாய்ந்து விழாதபடி நாற்புறமும் முளைகளை அடித்து, கம்பத்தின் உச்சிக்கும் முளைகளுக்கும் கயிறுகட்டுவார்கள். பெண்ணொருத்தி கம்பத்தின்மீது ஏறிநின்று ஆடுவாள். கீழ்நின்று ஆடலுக்கு ஏற்ப மத்தளம் முழக்குவார்கள். கிழவனாகிய ஒருவன் தலையின்மீது மட்டடங்களைச் சுமந்துகொண்டு கயிற்றின்மீது நடப்பான்.

இந்நிகழ்ச்சியைப் புலவர் தான் கண்ட இயற்கைக் காட்சியோடு ஒப்பிட்டுப் பாடுகின்றார். எப்படி? கம்பத்தினை ஒப்ப கமுகு இருக்கின்றது. நாற்புறமுள்ள முளைகள்போல, சிறிய வாழைமரங்கள் தோன்றியிருக்கின்றன. முளைகளுக்கும் கம்பத்திற்கும் கட்டப்பட்டிருக்கும் கயிறுகள்போல, கமுகுக்கும் வாழைக்கும் முல்லைக்கொடிகள் படர்ந்திருக்கின்றன. கம்பத்தின்மீது ஏறி நடிக்கும் பெண்போல, கமுகின்மீது மயிலாடுகின்றது. சிலர் கீழ்நின்று மத்தளம் முழக்குவதுபோலக் குரங்குகள் பலாப்பழத்தை அடிக்கின்றன. குடம் தாங்கி வடத்தின் மீது நடந்துசெல்லும் கூன்கிழவன் போல, குரங்கு பலாப்பழத்தைத் தலையின்மீது தூக்கிக்கொண்டு கொடியின்மீது செல்கின்றது. புலவர் இவ்வாறு ஒப்பிட்டுச் சொல்லோவியம் தீட்டுகின்றார். அஃதாவது:—

வண்டு கூட்டுண்ண
        நுண்துளி பிலிற்றித்
தண்தேன் உறைக்கும்
        தடமலர்ப் பொதும்பரின்
விழுக்குலை தெறிப்ப
        விட்புலத் தவர்க்குப்
பழுக்காய் தூக்கும
        பச்சிளங் கமுகில்
செடிபடு முல்லைக்
        கொடிபடர்ந்து ஏறித்
தலைவிரித் தன்ன
        கிளைதொறும் பிணைந்து
மறித்து கீழ்விழுந்து
        அக்கறைத்துணர்க் கொடிகள்
நாற்றிசைப் புறத்து
        நான்றன மடிந்து
தாற்றிளங் கதலித்
        தண்டினிற்படர அப்
பைங்குலைக் கமுகிற்
        படர்சிறை விரித்து ஒரு

# சிறந்த இலக்கியர்கள்

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, S. S. C. மாணவன்
A. நடராசா)

உலகத்தில் உள்ள மக்கள் பொதுவாக எல்லா விஷயங்களிலும் ஈடுபடுகிறார்கள். எவ்வாறு அவர்கள் அரசியல் விஷயத்தில் ஈடுபடுகிறார்களோ, அவ்வாறு இலக்கியத்திலும் ஈடுபடுகிறார்கள். அவர்கள் இலக்கியத்தை அறவே மறக்கவில்லை, ஆனால் அவர்களுக்கு அதில் ஊன்றின உற்சாகமில்லை. இடையிடையே ஊக்கமுடையவர்களாயும், மற்ற நேரங்களில் ஊக்கமற்றவராயும் இருக்கின்றனர். ஒருவன் பத்து வாரத்துக்கு முந்தி வாசித்த இன்புற்ற நாவலை பின்பும் வாசித்தால் அதில் இன்பம் நுகரலாம் என்று எண்ணமில்லை. காரணம் யாதெனில் அவர்களுக்கு அதில் ஊன்றிய உற்சாகமில்லாமையே.

ஏன் நாம் புலவரைப் பெரும் சிலராகப் பாராட்டுகிறோம்? ஏவ்வாறு பலரால் கருதப்படுகிறார்கள் என்று கூர்ந்து நோக்குமிடத்து அறிவுணர்ச்சியில் மேம்பட்ட சிலரே இவர்களைப் பாராட்டுகிறார்கள் எனபதறியலாம். புலவர்கள் இறந்தும் அவர்களுடைய புகழ் உடம்பு இருக்கின்றது. அது யாரால்? எக்காரணத்தினால் இருக்கின்றது? புலவர்களின் ஞானம்பொருந்திய கவிகளாலும், அவற்றைக் காலந்தோறும் ஆய்ந்து, ஆய்ந்து உலகத்தாருக்கு அறிவிப்பவர்களாகிய அறிவில் மேம்பட்டவர்களாலுமே. இவர்களுடைய புகழ்ச்சியைக் கூட்டவோ குறைக்கவோ பொது மக்களுக்கு ஆவல் இல்லை, அனேகர் சேர்ந்து ஒருவன் பெரியவன் என்று கூறினால், அவர்களும் அவ்வாறு மதிக்கும் பழக்கம் இயல்பாக உண்டு.

புலவர்களின் புகழ்ச்சியை ஒரு சந்ததியில் இருந்து மறுசந்ததிக்குக் கொண்டுபோகிறவர் கற்றறிவில் மேம்பட்ட மக்களே. அனேகர் ஒருவர் பெரியவர் என்று கூறுவர்! ஆனால் அவ்வாறுகூறிய வாக்குறுதியை அழியாமல் காக்கும் குணம் இவர்களிடத்தில இல்லை. பாமர மக்களுக்குத் திருவள்ளுவர் ஓர் பெருங் கற்றறிந்த சீலர் என்று கூறினால் அவர்களுக்கு விளங்காது. ஆனால் ஒருவனை நெடுங்காலமாக பெரியவன் என்று கூறிவந்தால், வழக்கத்தைக்கொண்டு அவர்களும் பெரியவன் என்று கூறுவார்கள். அவ்வாறு கூறுதல் அவர்களின் மூடநம்பிக்கையேயாகும். ஓர் புலவன் சாகும் பொழுது அப்புலவனுடைய நினைவு, அறிவு மேம்பட்டவர்களின் மனதில் நன்று மறைகின்றதோ அன்றைக்கே அப்புலவனும் மண்ணுலகிலிருந்து அறவே ஒழிகின்றான். ஓர் புலவனை மேன்மேலும் உயர்த்துவதும், கீழ்நிலையில் தாழ்த்துவதும் அறிவுமேம்பட்ட சிலர்களுடைய பொறுப்பே.

அறிவு மேம்பட்டவர்களை இவ்வாறு இலக்கியத்தில் முனைந்து நிற்கச் செய்வது யாது? அதற்கு ஒரே ஒரு உத்தரம்தான் உரைக்கமுடியும். அவர்கள் இலக்கியத்தில் இடைவிடா உற்சாகம் அடைவதே. மூடர்கள் எவ்வாறு உண்டுடுத்து மகிழ்கின்றார்களோ, அவ்வாறே அறிவில் உணர்ச்சி ததும்பப்பெற்றோர் கேடில்லாச் செல்வமாகிய கல்வியைக்கற்று எல்லையில்லா மகிழ்ச்சியை அடைகின்றனர். இதுவே மூடர்களுக்கும், உணர்ச்சி ததும்பப்பெற்ற அறிவுடையோர்களுக்கும் வித்தியாசம். அறிவுடையோர் தாங்களாகவே கற்று மகிழ்கின்றனர். அவர்கள் தாங்கள் விரும்பிய நூலை, உலகம் தூற்றினும் போற்றுவார். தாங்கள் விரும்பாத நூலை எவ்வாறு உலகம் போற்றினும் தூற்றுவர்.

உண்மையைப்பற்றி நினைக்குந்தோறும் படிக்குந்தோறும் மனம் சந்தோஷிக்கும். அதேமாதிரி உண்மையை உணர்த்துகிய இலக்கியத்தைப் படிக்குந்தொறும், ஆராயுந்தோறும் தன்னையறியாமல் உடம்பு புளகாங்கிதங்கொள்ளும். "அழகே உண்மை, உண்மையே அழகு" என்ற முதுரையின்படி, நாம் உண்மை ததும்பிய நூலைப் படிக்கும்பொழுது இன்பம் தானே வரும்.

இலக்கியம் என்பது யாது? அறிவு மேம்பட்டவர்களுக்குச் சுவையைக் கொடுப்பதே சிறந்த இலக்கியமாகும். ஒரு புத்தகமாவது, எவ்வித நியமமோ, கட்டுப்பாட்டையோ கூறுவதில்லை. அது இன்பத்தையே கொடுக்கும். ஓர் தேனீயானது பூவை விடாமல் எவ்வாறு இருக்கின்றதோ, அவ்வாறு புலவர்களையும் கற்றறிந்தோர் விடமாட்டார்கள்,

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் யூன் 5

காலை: 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வாதௌிவாத்யகோஷ்டி 8-30 திருச்சூர் எம் லட்சுமி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 திருச்சூர் எம் லட்சுமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை 5 வரகூர் முத்துஸ்வாமி ஐயர் வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 சித்ரகானம் இசைத்தட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 எம் எஸ் சுப்புலட்சுமி இசைத்தட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 வரகூர் முத்துஸ்வாமி ஐயர் வயலின் 8.30 ஸ்ரீ ரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 9 ஆங்கில நிகழ்ச்சி 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை (ஆங்கிலம்) 9-45 ஐரோப்பிய சங்கீதம் 10.30 முடிவு.

### வியாழன் யூன் 6

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 அர் மீனும்பாள் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 நந்தனார் சரித்திரம் இசைத்தட்டு 8.30 டி ஏ முகம்மது இப்ராஹீம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி ஏ முஹம்மது இப்ராஹிம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 டி ரங்கம்மாள் வீணை 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6.10 அறிவிப்புகள்வானிலை 6.15 மதுரை மணிஐயர் ஒலிப்பதிவு 6.30 சித்ரகானம் 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தமிழ் 7-30 தமிழில்செய்திகள் 7.45 முடிகொண்டான் வி வெங்கடராமையர் பாட்டு 9 உப்பிட்டவன், வசனநாடகம் 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள்வானிலை 9-45 வி வேணுகோபால் கிளாரினெட் 10 இசைவேளை 10.30 முடிவு.

### வெள்ளி ஜூன் 7

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி எஸ் பாலசுப்ரமணியம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 டி கே நடராசபாகவதர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே நடராஜபாகவதர்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 இலுப்பூர் நடேசபிள்ளைநாகஸ்வரம் 5-40 குரான்ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6.15 சித்ரகானம் 6.45 கிராமநிகழ்ச்சிகள் 7.15 செய்திவிளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 இலுப்பூர் நடேசபிள்ளை நாகஸ்வரம் 8.15 டி எஸ் பாலசுப்ரமணியம் பாட்டு 8 45 பிராயச்சித்தம் வசன நாடகம் 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை (ஆங்கிலம்) 9.45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை 10 30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யடிமையில்லாத புலவர்

திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்

சுந்தரமூர்த்தி நாயனர் பாடியருளிய திருத்தொண்டத்தொகைப் பதிகத்தில் அறுபது தனியடியாரையும் ஒன்பது தொகையடியாரையும் குறிப்பிக்கின்றது எல்லோரும் அறிந்த விஷயமே. இத்தொகையடியவருள் பொய்யடிமையில்லாத புலவரும் ஒருகுழுவினர், திருத்தொண்டத்தொகையின் ஏழாவது திருப்பாசுர முதலடியில்,

"பொய்யடிமை யில்லாத
புலவர்க்கு மடியேன்"

என்னுங் குறிப்ப இவ்வடியவரைப் பற்றிக் காணப்பட்டுளது. இத்திருத்தொண்டத் தொகைவகை நூலாகிய திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பிகள் இவ்வடியவர் யாவரென்பதைச் சிறிதளவு விளக்குகிறார்.

தாணியிற் பொய்ம்மையிலாத்
தமிழ்ச்சங்க மதிற்கபிலர்
பாணர்க்கீர்முதல்நாற்பத்
தொன்பது பல்புலவோர்
அருணமக் கீயுந்
திருவாலவாயான் சேவடிக்கே
பொருளமைத் தின்பக்
கவிபலபாடும் புலவர்களே.

என்னுந் திருவிருத்தத்தால் மதுரை மூன்றாஞ் சங்கத் தமிழ்ப் புலவர்களென்று போதரும். விரிநூலாகிய பெரியபுராணத்தில்,

செய்யுணிகழ் சொற்றெளிவுஞ்
செவ்விய நூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே
யெனத்துணிந் துணர்ந்தெவரெனின்
மையணியுங் கண்டத்தார்
மலரடிக்கே யாளானார்
பொய்யடிமை யில்லாத
புலவரெனப் புகழ்மிக்கார்,
பொற்பமைந்த வாவாகும்
பரிசடையார் தமையல்லாற்
சொற்பதங்கள் வாய்திறவாத்
தொண்டுநெறி தலைநின்ற
பெற்றியினின் பொய்யடிமை
யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையா
ரறிந்துரைக்க வல்லார்கள்.

என்னும் இரண்டு திருவிருத்தங்களிற் பொதுப்பட சிவபிரானைப் பாடும் தமிழ்ப் புலவர்களென்று கூறுகின்றார். மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களாகிய நாற்பத்தொன்பதின்மர் என்று எங்கும் கூறினாரில்லை. "மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார்" என்று சிறப்பிப்பதால் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களுக்கு அச்சிறப்புரிமையின்மை பற்றிப்போலும்! மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்கள் பல சமயத்தினரென்பது திருவள்ளுவர் மாலையாலும் சங்க நூல்களாலும் அறியலாம். சேக்கிழாரின் விளக்கத்தின்படி "பொய்யடிமையில்லாத புலவர்" என்னுந் தொடர்மொழி தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சைவப் புலவர்களையும் குறிக்கும்.

உமாபதி சிவாசாரியசர் தாம் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணசாரத்தில் இத்தொகை யடியவரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:

பொய்யறிபாக் கபிலரோடு
பரணாதிப்புலவோர்
பொற்பார் கலைகள்
பொருந்த வோதிச்
செய்யுளிடை வளராசு
மதுரநல்ல சித்திர
வித்தாரமெனத்
தெரிக்குஞ் செம்மை
மெய்யுடைய தொடைக
ளெல்லா மன்றுளாடல்
மேவியகோ னிருதாளில்
விரவச் சாத்திக்
கையுடையஞ் சலியினரா
யருளான மேலைக்

கருதரிய வமரலகங்
கைக்கொண் டாரே."

இவரும் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரென்று கூறவில்லை. இவர் பரணைப் பரமய கபிலர், பரணர் முதலியோர் என்று சைவப் புலவர்களை மீட்டும் குறிப்பிடுகின்றார். நம்பியாண்டார் நம்பிகள் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மர் என்று திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பித்துள்ளது கவனிக்கத்தக்கது.

திருவிளையாடற் புராணத்திலுள்ள சங்கத்தார் கலகந் தீர்த்த படலம், சங்கப் பலகைபளித்த படலம் முதலியவற்றாலும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் சங்கப் புலவர்களின் உருவங்கள் (49) இன்றும் வைத்து வழிபடப்படுவதாலும் சங்கப் புலவர்களெல்லாம் சேக்கிழார் காலத்திற்கு முன் (அதாவது நம்பியாண்டார் நம்பி காலத்தில்) சைவர்களாயிருந்தனரென்று யூகிக்கலாம். இவ்வாதாரங்களைக் கொண்டுபோலும் நம்பிகள் அங்ஙனங் கூறினர். இவையெல்லாம் ஆராயற்பாலன.

## ஆசிரியர் படுங் கஷ்டங்கள்

### அவற்றைச் சிந்தியாத அரசினர்

(R. T. சுப்பிரமணியம்)

குடிசனக்கணக் கெடுக்கவேண்டும். சுகாதார வைத்தியர் வந்து நாடிடவ ஓர் சுகாதார வாரமும், பின் பொருட்காட்சிகளும் கொண்டாடவேண்டும்; கல்வி வாரங்களும் நடத்தவேண்டும்; விடுமுறைக் கழகப் பிரசிசையாகக் கொண்டாடவேண்டும்; வராத பிள்ளைகளைக் கவனிக்கவேண்டும்; கிராமத்தில் செத்தவீடு ஆகிய பொதுக் கருமங்கள் நிறைவேற்றவேண்டும். சங்கக்கடை நிர்வகிக்கவேண்டும். கிராமச்சங்க அங்கத்தவம் பார்க்கவேண்டும். சனங்களுக்குப் "பேர்மிற்"றுக்கு எழுதவேண்டும். வெங்காயச் சங்கம், கமத்தொழிற் சங்கம், ஐக்கியசங்கம் இவை போன்றவை நடத்த வேண்டும். இவ்வாறாகச் சகல நோங்களிலும் பொதுசனசேவை செய்துவரும் நாங்களுஞ் சீவிக்கவேண்டாமா? ஆசிரியர்களும் உயிருள்ள பிராணிகளல்லவா? ஆனால் எங்களுடைய சேவைகளுக்குப் பலனை எங்கள் தொழிலுக்கேற்ப இறைவனிடத்திலிருந்து எதிர்பார்த்து வந்தோம். இத்தகைய தருமத்தொழில் புரியுமெங்களைச் செல்வாக்கை ஆயுதமாகக் கொண்டு அரசியற்சபைக்குச் செல்லுகின்ற பெரியாரென்றிருப்பவர்கள் நியாயப் பொருத்தமல்லாத சட்டஉயர்ச்சி விஷயத்தில் ஆசிரியர்களை அவர்களின் இத்தகைய மதிப்புக்குரியவராக வைத்து நடாத்தாது மிகவுங் கீழ்த்தரமானவோர் திட்டத்தை வகுத்துவிட்டனர்.

பெருந்தொகையான ஆசிரியர்களிருப்பதனு லித்தகையதிலே யேற்பட்டதாம். ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை வகுக்கின் பெருந்தொகைப் பணம் வேண்டும். ஆதலின் அவர்களின் பகைமையைப் பெற்றாலும் பறவாயில்லையென் றெண்ணி மற்றைய உத்தியோகத்தர்கட்குக் கூடிய சலுகை காட்டிவிட்டார்கள்.

ஆனால் சீட்டுறத்துக்குரிய இத்தொழிலை இனி விட்டுச் செல்ல முடியுமா? இல்லை. ஆசிரியர்களுக்கோர் சோதனைகாலம் இது. எங்களுடைய செல்வாக்கை

# குறளின் பண்பு

... சே. சத்தியோஜாதம் ஐயர் ...

சோழநாட்டை ஆண்ட அரசனகிய இராசேந்திரன் காலத்தில் மதியுடை மந்திரியாக விளங்கிய பெரியபுராண ஆசிரியரான சேக்கிழார்பிரான் அமைச்சுரிமை பெற்றது இக்குறளாலேயாம். அவ் விபரத்தைச் சிறிது ஆராய்வோம்.

இவருக்குமுன் அமைச்சராகவிருந்தவர் அவர் தந்தையாகிய வெள்ளியங்கிரி முதலியார். அக்காலத்தில் அரசசபையில் பூமியிற் பெரியது கடலிற் பெரியது மலையிற் பெரியது எவையென ஒரு வினவை அரையன் கூறி அவற்றிற்குத் தாஞ்சொல்லவேண்டிய காலத்தைக் குறிப்பிட்டுக் குறித்தகாலத்தில் விடையைக் கூறும்படி அமைச்சர்கட்குக் கட்டளை விடுத்தான்.

அமைச்சர், புலவர், பெரியோர் எல்லாரும் சேர்ந்து இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டனர். ஆயினும் அதால் பிரயோசனமில்லை. வெள்ளியங்கிரியார் தம்மூராகிய குன்றத்தூரையடைந்து ஆங்குப் பல அறிஞர்களை அழைத்து அவை கூட்டி ஆலோசித்தும் பயனில்லை.

அரையன் குறித்த அவதியும் நெருங்கிவிட்டது. அவைகூட ஒரு வாரம் மாத்திரமிருக்கிறது. முதலியார் ஒருவாரத்திற்கு முன் புறப்பட்டாற்றான் அன்றைக்கு அச்சபையில வந்து சேரலாம். ஆகையால் முதலியார் புறப்படுவதற்கு முதனாள் விடைபெறப்படா விசனத்துடன் உண்டியை வெறுத்து உறங்கத் தலைப்பட்டார். அன்று மாலை அவர் தனயன சேக்கிழார் ஆகாரங்கொள்ளவேண்டி அடுப்பங்கரைக்குச் சென்றார். அங்கு அன்னையைக் கண்டார், அவ்விடத்தில தந்தையைக் காணவில்லை. உடனே சேக்கிழார் அன்னையை நோக்கித் தந்தையெங்கே என வினவினர். அன்னை மகனைப் பார்த்து "அப்பா! உன் தந்தைக்கு உடம்பு சுகமில்லையாம்" என்றார். தந்தையும் மகனும் ஒருமித்துச் சாப்பிடுவது வழக்கம். அதனால் அருண்மொழியார் அவ்விடம்விட்டகன்று அத்தன இருந்த அறைநோக்கி விரைந்தார். அங்கு சென்று தந்தையைச் சுகமென்ன வென்று இருப்பதை யறிந்து சாப்பிட அழைத்தார். வெள்ளியங்கிரியார் வாமறுத்தனர். அவர் தான் யோசனையிலாழ்ந்திருப்பதை யறிவித்தார். அதைப் பார்த்த மைந்தர் நீங்கள வருந்தவேண்டாம், நானே உங்களுக்கு விடையைச் சொல்கிறேன். கவலையின்றிச் சாப்பிட வாருங்களென வலிந்தழைத்தார்.

வெள்ளியங்கிரியார் போசனமுடித்துக் கொண்டார். இருவரும் சாப்பிட்டபின் சேக்கிழார் விடையாராயத் தொடங்கினர். சேக்கிழார் திருக்குறளின் சிறப்புப் பாயிரத்திலுள்ள வெண்பாவாகிய இப்பாட்டைப் படித்தார். அது பின்வருமாறு:—

எல்லாப்பொருளு மிதன்பா
லுளவிதனபால்
இல்லாத எப்பொருளு மில்லையால்

—சொல்லால்
பரந்தபாவா லென்பயன்
வள்ளுவனார்
சுரந்த பாவையத்துணை.

இதைக்கொண்டு அரசன் கேள்விக்கு இதிலேயே விடையிருக்குமென்றும் நம்பிப்பார்த்து ஆராய்ந்து பூமியிற் பெரியது,

"காலத்தினாற் செய்தநன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது"
என்றும்
கடலிற் பெரிது
பயன்றூக்கார் செய்த உதவி
நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது
என்றும்
மலையிற் பெரிது
நிலையிற் றிரியா தடங்கியான்
தோற்றம்
மலையினும் மாணப் பெரிது,
என்றும் எழுதி வைத்தனர்,

வெள்ளியங்கிரியர் தஞ்சைக்குப் புறப்படும்போது பையன் அவ்வோலையைக் கொடுத்தான். அவர் அதைக்கொண்டு தஞ்சை சேர்ந்தார். சபை அமைச்சர், புலவர் எல்லோரும் குறித்த காலத்தில் வந்தடைந்தபின் கூடியது. முதல் வெள்ளியங்கிரியாரையே மறுமொழி கேட்கப்பட்டது. அவர் அந்த ஏட்டை அரசனிடங் கொடுத்தார். அரசன் சபைக்கு வாசித்துக்காட்டி ஆநந்தமடைந்தான். பின் வெள்ளியங்கிரியார் தம மகன் எழுதிக் கொடுத்த விடையெனவுந் தெரிவித்தார்.

பின அரசன அருண்மொழியாரை வரவழைத்து அவருக்கு "உத்தம சோழப்பல்லவன்" எனும் பட்டத்தைக் கொடுத்து வேண்டிய பரிசில்களும கொடுத்துத் தன அமைச்சராக்கினன.

இக்குறளின் பண்புதான் என்னே!
குறள வாழ்க!
குறளின் பண்பு வாழ்க!
குறளைப் படித்தோர் வாழ்க!!

## இயற்கைக் காட்சி

3ம் பக்கத் தொடர்ச்சி

கண்செய் கூந்தல்
களிமயில் நடிப்ப
கெடுந்தாள் மந்திகள்
குடங்கையில் தூக்கி
மூட்புறக் கனிகள்
தாக்கக் கொட்புறும்
வாநரம் ஒன்று
வருக்கைத் தீங்கனி
நாநெடுந் தேன்றுபு
தலைமேற் கொண்டு
மந்திகள் தொடர
மருண்டு மற்றந்தப்
பைந்துணர்க் கொடியில்
படர்தரு தோற்றம்
வடம்சூழ்ந்து கிடந்த
நெடும்பெருங் கம்பத்து
அணங்கனுள் ஒருத்தி
ஆடினள் திறப்பப்
பெரும்பணை தாங்கி
மருங்கினர் கொட்டக்
குடந் தலைக்கொண்டு ஒரு
கூன் கழைக்கூத்தன்
வடந்தனில் நடக்கும்
வண்ணமது எய்க்கும்.

(இப்பாடல் குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த திருஆரூர் நான்மணிமாலையிலுள்ளது).

—ஞானசம்பந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

## முஸ்லிம்லீக் கூட்டம்

நாளைக்கு ஜூன்மாசம் 5-ம் திகதி அகில இந்திய முஸ்லிம் லீக்கின் "கவுன்சில்" கூட்டம் டெல்கியில் கூடும். இந்தக் கூட்டத்தில் மந்திரி சபைத் தூதுக்கோஷ்டியின் திட்டமும், மிஸ்ரர் ஜின்னுவும் காங்கிரசும் எழுப்பிய பிரச்சினைகளுக்கு அவர்கள் கொடுத்த பதிலும் பரிசீலனை செய்யப்படும். நேற்றைய தினம் (3—6—46) கூடிய முஸ்லிம் லீக் காரிய நிருவாகசபை தீர்மானித்துள்ள முடிவுகளையும் லீக் 'கவுன்சில்' சிந்திக்கும். கவுன்சில் கூட்டத்துக்கு மிஸ்ரர் ஜின்னுவே தலைமை வகிப்பார் நேற்றைத்தினம் கூடிய லீக் காரிய நிருவாகசபைக் கூட்டத்தில் என்ன தீர்மானமானது என்பதுபற்றிய முடிவான தகவல்கள் கிடைக்கவில்லை. மந்திரிகள் வகுத்துள்ள திட்டத்தை ஏற்றுக்கொண்டு திருத்தியமைக்கப்படும் இராஜப்பிரதிநிதியின் நிருவாகசபையில் முஸ்லீம் லீக் பங்குபற்ற வேண்டும் என்ற அபிப்பிராயம் லீக் முஸ்லீம்களிடையே பலமாக உலவிவருவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

●

## பாஞ்சாலத்தைப் பிரிக்க யோசனை

சீக்கியர்கள் பாஞ்சாலத்தைப் பிரிக்கவேண்டும் என்று இப்போது கிளர்ச்சி செய்கிறார்கள். பாஞ்சாலம் ஏனைய முஸ்லீம் மாகாணங்களுடன் சேர்ந்தால், தமது செல்வாக்கு அற்றுவிடும் எனச் சீக்கியர் அஞ்சுகின்றனர். எனவே, பாஞ்சாலத்தை இரண்டு பாகங்களாகப் பிரிக்கவேண்டும் என்று மத்திய சட்டசபை அங்கத்தவரான சர்தார் மங்களசிங் இராஜப்பிரதிநிதிக்கு எழுதியிருக்கிறார்.

●

## தீவிரவாதிகளின் கண்டனம்

மகாத்மாகாந்தி முதலியவர்களுக்கு மந்திரிகள் வகுத்துள்ள திட்டம் ஓரளவுக்குத் திருப்தியளித்தபோதிலும், காங்கிரஸிலுள்ள தீவிரவாதிகளுக்கு இத்திட்டம் திருப்தியளிக்கவில்லை. ஸ்ரீமதி அருணு, ஜெயப்பிரகாஷ் நாராயணன், டக்ரர் ருமமனே கர் லோஹியா முதலியோர் இத்திட்டம் இந்தியரை அகப்படுத்த வைத்துள்ள ஒரு சூழ்ச்சி என்றே கருதுகின்றனர். "ஒரு பக்கத்தில் இதோ பிடி சுயராஜ்யம் என்கிறார்கள், ஆனால் மற்றோர்பக்கம் அடக்குமுறைச் சட்டத்தை அதிதீவிரமாக அமுல் நடத்துகின்றனர். இந்திய அரசாங்கத்தின் ஆதரவு பெற்றுள்ள சமஸ்தானங்களில் பொதுஜன இயக்கங்களை நசுக்குவதற்கு ஆற்றப்படும் முறைகள் இந்தக் கொள்கையை வற்புறுத்துகின்றன; எது எப்படியிருந்தபோதிலும், காங்கிரஸ் பிரிட்டிஷாருடன் போர்புரிந்து எமது பிறப்புரிமையாம் சுவதந்திரத்தைப் பறிக்கவேண்டும்". என்று சென்றவாரம் ஸ்ரீஜுத் ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறியது குறிப்பிடத்தக்கது.

●

## வழிக்கு வருகிறரா?

முஸ்லிம்லீக் தலைவர் மிஸ்ரர்ஜின்னு, முஸ்லிம் லீக் காரியசபைக் கூட்டத்துக்கு டெல்கிக்குப் புறப்படுமுன்னர் சிம்லா முஸ்லிம் லீக்கினர் அவர்க்கு ஓர் உபசாரக் கூட்டம் நடத்தினர். அதிற்பேசிய மிஸ்ரர் ஜின்னு "இப்போது இந்தியாவில் உள்ள அரசியற் பிரச்னையைச் சிநேக பான்மையுடன் தீர்த்துக்கொள்ள முடியும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். நான் அத்தகைய நம்பிக்கையுடனேயே டெல்கிக்குப் போகிறேன். எங்கள் முயற்சிகள் அநுகூலமடைய உங்களது நல்லாசியைக் கோருகின்றேன்" என்று குறிப்பிட்டார்.

## சஷ்டியப்த பூர்த்தி

### பொதுக்கூட்ட விபரம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் சென்ற 33 வருட காலம் தமிழ்ப் போதகாசிரியராய் விளங்கியவரும் "இந்துசாதன"ப் பத்திராசிரியராகச் சென்ற 35 வருட காலமாக வெகு திறமையுடன் கடமையாற்றியவருமாகிய பண்டிதர் ம வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களின் 60-ம் ஆண்டு நிறைவு இப்பொழுது நிகழ்தலாயிற்று. சமயத்தின் பொருட்டும் தமிழின் பொருட்டும் இவ்வாறு உழைக்கும் அறிஞர்களுக்கு இந்தியாவிலே ஊரவர்கள்கூடிச் சன்மானிப்பது வழக்கம். இப்படியே இங்கும் பண்டிதர் திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களின் சஷ்டியப்தபூர்த்தி காலத்தில் இவரைச் சன்மானித்து உபசரிக்கவேண்டும் என்று நோக்கங்கொண்ட அபிமானிகளுடைய கூட்டம் ஒன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை (2-6-46 பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நிகழ்ந்தது.

கூட்டத்திற்கு, இளைப்பாறிய வித்தியாதரிசி திரு. கா. கந்தையா அவர்கள் தலைவராயமர்ந்தார். தலைவர் அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி, பண்டிதர் அவர்கள் நீடித்த காலம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் போதகாசிரியராகவும், இந்துசாதன ஆசிரியராகவும் இருந்து செய்த சேவைகளைப் பாராட்டிப் பேசினர், யாழப்பாணம் சரசுவதி விலாசசபை போன்றஸ்தாபனங்கள் மூலமாகப் பண்டிதர் நாடகக்கலை வளர்ச்சிக்குச் செய்த சேவைகளையும் குறிப்பிட்டார்.

வித்துவான் ந. சுப்பையபிள்ளையவர்கள் நிர்வாகசபையொன்று அமைப்பதற்காய சில குறிப்புரைகள் கூறினர். அதன்பின் உபசாணைக்கூட்டமொன்று ஒழுங்கு செய்வதற்காக, கீழ்க்காணும் உத்தியோகத்தர்கள்கொண்ட ஓர் நிர்வாகசபை தேர்ந்தெடுக்கப்பட்டது

தலைவர் திரு. K. கந்தையா; காரியதரிசி திரு. க. சி. சுப்பிரமணியம்; உபகாரியதரிசி திரு. செ. சோமாஸ்கந்தர்; தனாதிகாரி திரு. அ. கனகசபாபதி.

இன்னும் 25 பேருக்கு மேற்பட்ட ஓர் நிருவாகசபையும் தெரிவுசெய்யப்பட்டதும் கூட்டம் மாலை 5 மணியளவில் தேவார பாராயணத்துடன் நிறைவுற்றது.

## நியமன அங்கத்தவர் விலகிறர்

இலங்கை அரசாங்கசபையில் ஐரோப்பியர் நியமனப் பிரதிநிதியாயுள்ள மிஸ்ரர் ஜே. டபிள்யூ. ஒல்பீல்ட் இம்மாதம் 15-ந் திகதியுடன் தம் பதவியைவிட்டு விலகுவார்.

## சம்பள அறிக்கை நிறைவேறியது

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வேதனம் அதிகரிப்பதற்கான அறிக்கை சென்ற வியாழக்கிழமை அரசாங்கசபையில் நிறைவேறியது.

## 1 லட்சம் ஏக்கர்

வடமத்திய மாகாணத்தில் 1 லட்சம் ஏககர் நிலத்தில் இம்முறை வேளாண்மை செய்யப்பட்டிருக்கிறது.

இவருடைய வழக்கமான வெருட்டுக்களும், ஜம்பங்களும் இந்தக் கூட்டத்துச் சொற்பொழிவில் இல்லாமை முஸ்லிம்லீக் சமரச மனப்பான்மையுடன் மற்றக் கட்சிகளுடன் ஒத்துழைத்து, நிறுவப்படும் இராஜப்பிரதிநிதிசபையில் ஒத்துழைப்பதற்கு உற்பாதமாகும் என்று அரசியல் வட்டாரங்களில் சொல்லப்படுகின்றது.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

அன்னதன் வெம்மைகண் டமலன் பாங்குறை
கன்னியும் வியர்த்தனள் சலங்கி யேயெழீஇப்
பொன்னடி நூபுரம் புலம்பித் தாக்குறத்
தன்னதோ ருறையுளைச் சார வோடினள்

பெருமானுடைய திருமருங்கில் எழுந்தருளிய நித்திய கன்னிகையாராகிய ஈசுவரியும் அந்த அக்கினியின் வெப்பத்தைப் பார்த்துத் திருவுளமுந் திருமேனியும் வியர்த்தனராய்க் கலக்கங்கொண்டு இருக்கைவிட்டெழுந்து தமது அழகிய திருவடிகளில் அணிந்துள்ள சிலம்புகள் புலம்பித் தாக்குறத் தமது ஒப்பற்ற திருக்கோயிலைச் சேருதற்பொருட்டு ஓடிச் சென்றருளினரென்பது கருத்து.

இறைவனது இடப்பாகத்திற் பொருந்திய திருவருட் சத்தியாகிய இறைவியையும் அந்த அக்கினியின் வெம்மை தாக்கியதென்பார் பாங்குறை கன்னியும் என உயர்வு சிறப்பும்மை கொடுத்துக் கூறினர்; நூபுரம் புலம்பித் தாக்குறவோடியமை மேல்வரும் வரலாறென்றிற்கேதுவாயிருத்தலின், இங்கே யெடுத்துச்சொல்லப்பட்டது; முருகக்கடவுளின்றோற்றம் இறைவியைப் புறக்கணித்து இயற்றப்பெற்ற தென்பது இத்திருவிருத்தத்தினற் பெறப்படலாயிற்று. (51)

முண்டக னுதியா முன்னர் நின்றுள
வண்டர்கள் யாருமவ் வழல்கண் டஞ்சியே
விண்டனர் தலைத்தலை வெருவி யோடினர்
பண்டெழு விடத்தினற் பட்ட பான்மைபோல்

முண்டகன் - தாமரையாசனராகிய பிரமா: தலைத்தலை விண்டனர் - இடந்தோறுஞ் சிதைந்து: பண்டெழு விடத்தினற் பட்டபான்மைபோல் - முன்னர் அமிர்தத்தைப் பெறலாமெனப் பாற்கடலை மத்தித்த தேவர்கள் தாம்கொண்ட நோக்கத்திற்கு நேர்மாறாக அக்கடலில் நஞ்சு பிறந்து தம்மைத் துரந்தபோது எங்ஙனம் அஞ்சியோடினர்களோ, அங்ஙனமே இப்பொழுதும் திருக்குமாரரொருவர் தம்பொருட்டுத் தோன்றுவரென எதிர்பார்த்தவண்ணம் நின்ற தேவர்கள் தம் நோக்கத்திற்கு மாறாக வெவ்விய அக்கினி பிறந்து தம்மைச் சுடக்கண்டு அஞ்சியோடின ரென்றபடி. (52)

வலைத்தலை மானென வன்னி சூழ்ந்துழித்
தலைத்தலை யிரிந்துளோர் தம்மின மீண்டுறு
நலத்தகு கண்ணுத லுதற் சேர்ந்தனர்
கலத்தலை யகன்றிடாக் காகம் போலவே.

அந்த அக்கினி தம்மைச் சூழ்ந்தபோது, வலையிலகப்பட்ட மான்போல, சிதைந்து இடந்தோறும் ஓடிய தேவர்கள் (சிறிதுநேரஞ் செல்ல) தாமாகவே மீண்டுவந்து நன்மைக்கிடமாகிய நெற்றிக்கண்ணையுடைய தலைவராகிய கைலாசபதியை அடைந்தார்கள்; அத்தேவர்களுடைய செயல் நடுக்கடலிலோடுந் தோணியின் பாய்மரத்தை விட்டு வேறெங்கேனும் பறந்து செல்லமுடியாத காக்கையின் செயலையொத்திருந்த தென்பது கருத்து.

வலைத்தலை யென்பதில் தலை ஏழாம்வேற்றுமை யுருபு; வேடர் மானை உட்படுத்தி நாற்புறமும் வலையை மாட்டிவிட, அந்த மான் தப்பியோடவெண்ணி எங்கே யோடினும் அங்கே செல்லவொட்டாது வலை தடுத்தல் போல, இங்கும் தேவர்கள் அந்நெருப்பின் வெம்மைக்கஞ்சி எங்கெங்கே ஓடினரெனினும் அங்கங்கெல்லாம் வெம்மை அவர்களைத் தாக்கியதென்றபடி; தோணி துறைமுகத்திற் கிடக்கும்போது அதன் பாய்மரத்தில் வந்து தங்கிக் காக்கை யுறங்கியிட, இதற்கிடையில் தோணி துறையைவிட்டுப்புறப்பட்டுக் கடலிலே வெகுதூரஞ் சென்றுவிட, அந்த நேரத்தில் விழித்த காக்கை கரையை நோக்கிச் சிறிதுதூரம் பறந்தும் கரை காணுமையால் மீண்டும் அப் பாய்மரத்தையே நோக்கிப் பறந்து அதன்கண் தங்கும்; அதுபோலவே பரமசிவனைத் தவிரத் தங்கட்குப் பற்றுக்கோடு வேறெவருமில்லாமையினல் அத்தேவர்கள் மீண்டும் பரமசிவத்தை யடைந்தார்களென்பதாம். "சீகரமறிகடற் சென்று நவ்விசேர் — காகமதென்னநின் கயிலையன்றியே — ஏகவோரிடமிலை......" எனத் தேவர்கள் இறைவனை இரந்ததாக ஆசாரிய சுவாமிகள் இந்த உவமானத்தை இப்புராணத்திற் பிறிதோரிடத்துச் சிறிது விரித்துக் கூறியிருத்தல் காண்க. இத்தேவர்கட்குச் சிவபிரானன்றித் தஞ்சம் பிறரில்லை யென்பது இத்திருவிருத்தத்தின் குறிப்புப்பொருள். (54)

## தேகவியோகம்

### சிதம்பரநாதன்

வண்ணார்பண்ணை திரு. இ மாரிமுத்து உபாத்தியாயரின் பௌத்திரரும், திரு சிவசுப்பிரமணியமவர்களின் புதல்வருமாகிய திரு, சிதம்பரநாதனவர்கள் சென்ற மேமீ 25-ந் திகதி சனிக்கிழமை தம்மைச் சிலகாலமாகப் பீடித்து வருத்திய நோய் காரணமாக வண்ணார்பண்ணையிலுள்ள தமது இல்லத்திற்றனே தேகவியோகமாயினர்; இறக்கும்போது இவருக்கு வயசு 35: இவருடைய அகாலமரணம் பெரிதும் அநுதாபப்படத் தக்கதாம், இவர் ஆன்மா சாந்தியடைக.

### தானவரவு

இவரது ஈமக்கிரியைப்போது, இவருக்குத் தமயன்முறை பூண்ட திரு. சி. கதிரவேலு அவர்களால், யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபைக்குத் தானமாக வரித் தனுப்பிய ரூபா 2 பெற்றும்,

மனேஜர்.

### ஸ்ரீ V. M. சவணமுத்து

கண்டிமாநகரில் 23 வருஷ காலமாக நியாயதுரந்தரராய், நகரசபையிலும் அங்கத்தவராகவிருந்த ஸ்ரீ V. M. சரவணமுத்து அவர்கள் சென்ற 26-5-46ல் நல்லூரில் உள்ள தமது இல்லத்திற்றனே தமது 69ம் வயதில் தேகவியோகமாயினர். ஸ்ரீமான் சரவணமுத்து அவர்கள் சிலகாலம கொழும்பு நியாயஸ்தலங்களிலும் நியாயதுரந்தராகவிருந்து 5 ஆண்டுகளுக்கு மு . யாழ்ப்பாணத்துக்கு மீண்டு தமது சட்டத்தொழிலை ஆற்றிவந்தார். இவர் அநேக பொதுக் கைங்கரியங்களில் ஈடுபட்டு ஜனசமூகநன்மைக்காக உழைத்த பெரியார்

கொழும்பு அற்றேணி ஜெனரலின் பகுதியில உதவிச் சட்ட வகுப்பாளர் ஆகவுள்ள ஸ்ரீ. S தங்கராஜா, யாழ்ப்பாணம் நியாயதுரந்தரர் ஸ்ரீ S. செல்வராஜா என்பவர்கள் இவரின புத்திரராவர்.

இவரைப் பிரிந்து துன்புறும் புதல்வர் சுற்றமித்திரருடன் எமது அநுதாபம உரியதாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிறைப் - விற் - டி
(GRIPE—VIT—D)
குழந்தைகளுக்கு
ஆரோக்கியத்தைத் தரும்

வயிற்றுவலி, புளிப்புத்தன்மை, உவாந்தி, வாய்வுத்தன்மை, வலி, பல்லரும்பும்போதுள்ள வருத்தம், வயிற்றோட்டம், விக்கல் முதலிய
குழந்தைகளின் சகலரோகங்களுக்கும்
நிச்சய நிவாரணம்

**கிடைக்கும் இடங்கள்:**

கொம்மேஷல் பிறெஸ்
டயறம்ஸ்
சிற்றி டிஸ்பென்ஸரி
நியூற்றன்ஸ்
} பெரியகெடை, யாழ்ப்பாணம்.

றோயல் பாமேசி
றோயல் டிஸ்பெ்ஸரி
மெடிக்கல் ஹோல்
யாழ்ப்பாண
ஐக்கியசங்கக் கடை
} ஆஸ்பத்திரிவிதி, யாழ்ப்பாணம்.

K. C. தெட்சணாமூர்த்தி, காங்கேசன் துறைறோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

**மொடேண் ஏஜென்சீஸ்,**
சிலாபம், (இலங்கை)
(Mis 8:. 31—31-12-46)


## கொழும்பு தமிழ்க் கழகம்

கொழும்புத் தமிழ்க் கழகத்தின் நான் காவதாண்டுப் பொதுக்கூட்டம், வெள்ள வத்தை தமிழ்க்கழக மண்டபத்தில், 26-5-46 காலை பத்து மணியளவில் திரு. அ சபாரத்தினம் அவர்களின் தலைமை யில் கூடிற்று,

அடுத்தாண்டிற்குரிய செயலாளரும், திருவாகசபை அங்கத்தவர்களும் பின்வரு மாறு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட் டனர்.

போஷகர் திரு N நடராசா K, C. உபபோஷகர்கள் திருவாளர்கள் A. கார் டினர், க. கனகரத்தினம், அ. சபாரத்தி னம், தலைவர் க. ச. அருள்நந்தி (தலைவர் அரசினர் ஆசிரிய கலாசாலை) உபதலைவர் கள் டாக்டர் க. கணபதிப்பிள்ளை, டாக் டர் த. நல்லைநாதன், M S. திருவிளங் கம், க இரத்தினநாதர், K. மதியாபர ணம்,

காரியதரிசி வித்துவான் வ. மு. கனக சுந்தரம், உபகாரியதரிசி திரு உ. கந்த சாமி, தனாதிகாரி திரு வி. பொன்னையா உபதனாதிகாரி திரு. சி. பொன்னுத் துரை நூல்நிலையப்பொறுப்பாளர் க. ஆ. தங்கராசா, இல்லப்பொறுப்பாளர் அ. வ. இரத்தினராசா அங்கத்துவ காரியதரிசி கள் திருவாளர்கள்: ஆ இரத்தினவடி வேல், இ சீதாபதிஐயர்,

திருவாகசபை அங்கத்தவர்கள் திருவா ளர்கள்: குல. சபாநாதன். V. செல்வவிநா யகம், அ. அருளம்பலம், கா பொ. இரத் தினம், மு. வயிரவிப்பிள்ளை, பெ. கண பதிப்பிள்ளை, R புலேந்திரன், K. வைர முத்து, இ சிவராசா, சோ சிவபாதசுந் தரம்

திரு. N. நடராசா K. C. யாழ்ப்பா ணத்தில் ஓர் தமிழ்க்கலாசாலை நிறுவ வேண்டிய அவசியத்தைப்பற்றியும், இலங் கைச் சர்வகலாசாலை, தமிழ் ஆராய்ச்சி செய்வதற்குத் தகுந்த மாணவர்கட்கு உபகாரச்சம்பளம் கொடுப்பதற்கு நிதி திரட்டவேண்டியதின் அவசியத்தைப்பற் றியும் எடுத்துக் கூறினர்.

—சடித.


## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங் கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல் லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
(Mis 25 23-4 46 to 22-3-47)


## பகிரங்க அறிவித்தல்

ஐயன்மீர்!

எனது ஆட்சியும் சொந்தமு மான நீர்வேலி இறை வடுவா வுடை நெ. ப. 15 ஐ (கிழக்கு கதிர்காமர் கார்த்திகேசுவுக்கும், தெற்கு விதையா நிலமும், மே ற்கு கதிர்காமர்கந்தையாவுக்கும், வடக்குசீனியர்கந்தையாவுக்கும் அம்மன் கோவிற்குமுரிய ஆதன ங்களை எல்லையாகவுடைய ஆக னத்தைச்) சிலர் கள்ளச் சாத னம் செய்து வைத்திருப்பதாக அறிகிறேன். ஆதலின் இவ் வாதனத்தைப்பற்றிய சகல உரி மைகளும் எனக்கே உண்டென் பதைக் கற்பித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்
P. சின்னையா - நடராசா
நீர்வேலி தெற்கு. 20—5—46
Mis 51 - 24-5—23-6-46


## தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்
**சந்தனாதித் தயிலம்**

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், மூரசு வளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத் தரவாதமுடையது. ஒரு தடவை வேண் டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட் டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு:

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4 46—25-10-46


## தேவை

கந்தர்மடம் மேற்கு ஐக்கிய பண்டக சாலைக்கு அனுபவம் உள்ள ஒரு மானேஜர் தேவை. சம்பளம் மாதமொன்றுக்கு ரூபா கொடுக்கப்படும் மற்றும் விபரத் தை என்னிடம் நேரில் கண்டு அறிந்து கொள்ளலாம்,

விண்ணப்பம் 15-6-46 வரையும் ஏற் றுக்கொள்ளப்படும்,

E. சபாலிங்கம்
காரியதரிசி

Mis 70 4-6-46


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா
**134,3670**
**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங் கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்க வும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)



வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்
வீமாக்கொம்பனி லிமிற்றெட்
ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புதவெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆ௵ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)



## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப் படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற் கால நிலைமைக்கும், தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச செம்யபபட்டு இக்காலத்தில் அதிக மாய் உபயோகிக்கப்படுகின்றன, கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவை களே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள், மற்றைய ஓடுகளில ஏமாந்து நட்டப்படாதீர்கள்.

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்
1888-ம் ஆண்டுமுதல்.

Misc 250—19-3-46—19-9-46) (செ)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோனமுறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday June, 4, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org